# ஸ்ரீ துக்க நிவாரன அஷ்டகம்

மங்கள ரூபினி மதியனி சூலினி மன்மத பானியளெ,

சங்கடம் நீங்கிட சடுதியில் வந்திடும் ஷங்கரி சௌந்தரியெ,

கங்கன பானியன் கனிமுகம் கண்ட நல் கற்பக காமினியெ,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரனி காமாக்ஷி.

கானுரு மலரென கதிரொலி காட்டி காத்திட வந்திடுவாள்,

தானுரு தவஒலி தாரொலி மதியோலி தாங்கியே வீசிடுவாள்,

மானுரு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரனி காமாக்ஷி.

ஷங்கரி சௌந்தரி சதுர்முகன் பொற்றிட சபையினில் வந்தவளெ,

பொங்கரி மாவினில் பொன் அடி வைத்து பொரிந்திட வந்தவளெ,

என் குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தனல் துர்கையளெ,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரனி காமாக்ஷி.

தனதன தன் தன தவிலொலி முழங்கிட தன்மணி நீ வருவாய்,

கங்கன கன் கன கதிரொலி வீசிட கண்மணி நீ வருவாய்,

பன்பன பம் பன பரை ஒலி கூவிட பண்மணி நீ வருவாய்,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரனி காமாக்ஷி.

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சனல் பானியளே,

கொஞ்சிடும் குமரனை குனமிகு வேழனை கொடுத்தனல் குமரியளெ,

சங்கடம் தீர்திட சமரது செய்தனல் சக்தி எனும் மாயே,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரனி காமாக்ஷி.

என்னியபடி நீ அருளிட வருவாய் என் குல தேவியளெ,

பன்னிய செயலின் பலன் அது நலமாய் பல்கிட அருளிடுவாய்,

கன்னொலி அதனால் கருனையை காட்டி கவலைகள் தீர்பவளெ,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரனி காமாக்ஷி.

இடர் தரும் தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்,

சுடர் தரும் அமுதே ஸ்ருதிகள் கூறி சுகம் அது தந்திடுவாய்,

படர் தரும் இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி.

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஶ்ரீதேவி,

ஜெய ஜெய துர்கா ஶ்ரீபரமெஸ்வரி ஜெய ஜெய ஶ்ரீதேவி,

ஜெய ஜெய ஜெயந்தி மங்கலகாளி ஜெய ஜெய ஶ்ரீதேவி,

ஜெய ஜெய ஷங்கரி கௌரி க்ரிபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி